இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 16.10.2026

நிர்வாகச் சுணக்கமே பணவீக்கம்!

திராவிட மாடல் ஆட்சியின் போது தமிழ்நாட்டில் பணவீக்கம் குறைந்து கொண்டே வந்தது. அதற்குக் காரணம், திறம்பட்ட நிர்வாகம் நடைபெற்றது. அதனால் பணவீக்கம் குறைந்தது. இன்றைக்குப் பணவீக்கம் அதிகமாகி வருகிறது. இன்றைய த.வெ.க. அரசின் நிர்வாகச் சுணக்கம், மெத்தனம், திறமையின்மை, அலட்சியம்தான் இதற்கு முழு முதல் காரணம் ஆகும்.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு இந்தியாவின் இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரமாக தன்னைத் தக்க வைத்துக் கொண்டது.

மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொண்டது. தொடர்ச்சியாக இரட்டை இலக்க வளர்ச்சியை அடைந்து வந்தது. இந்தச் செயல்பாடு, மாநிலத்தின் வலுவான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு வலிமைகளை எடுத்துக்காட்டி, இந்தியாவின் வளர்ச்சிக்கு ஒரு முன்னணிப் பங்களிப்பாளராக தன்னை நிலைநிறுத்திக் காட்டியது.

'கோவிட்' காலத்துக்கு முந்தைய காலத்தைவிட அதிக வளர்ச்சியை திராவிட மாடல் ஆட்சியானது அடைந்தது. இலக்கு வைக்கப்பட்ட நிதி நடவடிக்கைகள் மற்றும் தொழில்துறைக் கொள்கையின் ஆதரவுடன் இது செயல்படுத்திக் காட்டப்பட்டது. உட்கட்டமைப்பு வசதிகள் இதனை உருவாக்கித் தந்தது. அந்நிய நேரடி முதலீடுகளுக்கான (FDI) ஒரு முன்னணி இடமாகவும் தமிழ்நாடு அப்போது உயர்ந்தது.

அனைத்துத் துறை வளர்ச்சியின் மூலமாக மாநில வளர்ச்சியை உறுதி செய்தார் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து மக்கள் வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி என்பதை உறுதி செய்தார் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின். இது மக்களின் சமூக வாழ்வியலை வளர்த்தது. தனிநபர் வருமானம் கூடியது. உற்பத்தி கூடியது. வேளாண்மை அதிகரித்தது. விலைவாசி குறைந்தது. தமிழ்நாடு அரசு உருவாக்கிக் கொடுத்த சமூக நலத் திட்டங்கள் மூலமாக மக்கள் தன்னிறைவு அடைந்தார்கள். ஒன்றிய அரசின் சமூக வளர்ச்சிக் குறியீடுகள் அனைத்திலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டினார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

கட்டணமில்லா பேருந்துப் பயணம் - மகளிருக்கு உரிமைத் தொகை - காலை உணவுத் திட்டம் - தமிழ்ப்புதல்வன் - புதுமைப்பெண் - நான் முதல்வன் - உடலினை உறுதி செய் - மக்களைத் தேடி மருத்துவம் - நம்மைக் காக்கும் 48 - வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கை - குறுவைத் தொகுப்புகள் - கட்டணமில்லா மின் இணைப்புகள் - மாற்றுத் திறனாளிகள் நலன் - மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடனுதவிகள் - விளிம்பு நிலை மக்களுக்கான திட்டங்கள் போன்றவை காரணமாக ஒவ்வொரு வீட்டுக்கும் ஏதாவது ஒரு திட்டத்தின் பலன் போய்ச் சேர்ந்தது. இவை அனைத்தும் சேர்ந்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியது.

இந்தியாவின் தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் பண வீக்கம் குறைந்த போதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பணவீக்கம் குறைவு என்று புள்ளிவிபரம் வந்த போதும் ஆங்கிலப் பத்திரிக்கைகள் எழுதியது என்ன தெரியுமா?

'தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் சமூக நலத்திட்டங்கள் தான் இதற்குக் காரணம்' என்று ஆங்கிலப் பத்திரிக்கைகள் எழுதின.

திராவிட மாடல் ஆட்சியின் சமூக நலத் திட்டங்களால் வறுமை ஒழிந்தது. பட்டினிச்சாவுகள் இல்லை. புதியபுதியவேலைவாய்ப்புகள்உருவாக்கப்பட்டன. தனிநபர் வருமானம் அதிகம் ஆனது. கர்நாடகாவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு தனிநபர் வருமானம் உயர்ந்த மாநிலம் ஆனது. இதன் காரணமாகத்தான் பணவீக்கம் குறைந்தது. இத்தகைய பெரும் சாதனையை ஆறு மாதத்துக்கு முன்பு வரை பார்த்தோம். இப்போது எதிர்மறையாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம் த.வெ.க. ஆட்சியில்.

இந்தியாவிலேயே சில்லறைப் பணவீக்கம் அதிகமான மாநிலமாக இப்போது தமிழ்நாடு ஆகி இருக்கிறது. சில்லறைப் பணவீக்கம், உணவுப் பணவீக்கம் ஆகிய இரண்டிலும் தமிழ்நாடு உச்சத்தைத் தொட்டுள்ளது. இதனை ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை கடந்த 12 ஆம் தேதியன்று அறிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் பணவீக்கத்தில் தெலங்கானா முதலிடத்தில் இருந்தது. தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருந்தது. இப்போது தமிழ்நாடு பணவீக்கத்தில் முதலிடத்துக்கு வந்து விட்டது. பணவீக்கம் 6 விழுக்காடு இருக்கலாம் என்பது ரிசர்வ் வங்கியின் கணிப்பு ஆகும். ஆனால் தமிழ்நாட்டின் இப்போதைய பணவீக்கம் 6.81 விழுக்காடு ஆகிவிட்டது.

இந்தியாவின் மொத்த பணவீக்கம் 5.54 விழுக்காடுதான். ஆனால் தமிழ்நாட்டின் பணவீக்கம் 6.81 விழுக்காடு ஆகும். இந்திய சராசரியை விட, ரிசர்வ் வங்கியின் அளவுகோலை விட அதிகம் ஆகிவிட்டது.

உணவுப் பொருட்களின் விலை உயர்விலும் இன்று தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. உணவுப் பணவீக்கமானது 10.62 விழுக்காடாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்திய விழுக்காடு என்பது 7.74 விழுக்காடுதான். அதை விட தமிழ்நாடு அதிகம் ஆகி வருகிறது. அரிசி, பருப்பு மட்டுமல்ல, அனைத்துப் பொருட்களின் விலையும் மிக மிக மிக அதிகம் ஆகிவிட்டது.

ஆனால், 'உணவுப் பொருள் விலை உயரவே இல்லை' என்கிறார் உணவுத் துறை அமைச்சர் வெங்கடரமணன். இப்படி ஒருவர் அமைச்சராக இருக்கிறார் என்பதை இதன்மூலமாக தமிழ்நாடு தெரிந்து கொண்டது. இவர் எங்கே போய் பார்த்தார், யாரிடம் விசாரித்தார் என்பதைவிட இத்தனை நாட்கள் எங்கே இருந்தார் என்றுதான் கேட்க வேண்டும்.

மின்வெட்டுக்கு என்ன காரணம் என்றால் 'காற்று இல்லை' என்கிறார் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா . பேருந்துகளை ஏன் விடவில்லை என்றால், 'நான் சாப்பிடவில்லை' என்கிறார் அமைச்சர் தமிழ் பார்த்திபன். எந்தக் கேள்வி கேட்டாலும் 'வணக்கம்' மட்டும் வைக்கிறார் அமைச்சர் ஆனந்த். எவரும் அவர் துறைக்கு பொறுப்பு ஏற்பது இல்லை. 'நமக்கு ஒரு கார் கிடைத்துவிட்டது' என்று போய்க் கொண்டு இருக்கிறார்கள்.

முதலமைச்சர் பதவியை வைத்து என்ன செய்வது என்று முதலமைச்சராக வந்தவருக்கும் தெரியவில்லை. தனிமையில் இனிமை கண்டு வருகிறார். அவருக்கும் அமைச்சர்களுக்கும், மூத்த அதிகாரிகளுக்கும் தொடர்பு இல்லை. அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தொடர்பு இல்லை. அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் தொடர்பு இல்லை. இத்தகைய மந்தநிலை தான் பணவீக்க உயர்வுக்குக் காரணம்.

'அது அது, அதனதன் போக்கில் போகிறது' என்பார்களே, அப்படி நாடு போய்க் கொண்டு இருக்கிறது. திறமையற்றவர்கள், சிந்தனை யற்றவர்கள் கையில் மாநிலம் போனால் என்ன ஆகும் என்பதைத்தான் தமிழ்நாட்டில் இப்போது பார்க்கிறோம்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில், தெய்வீகத் திருமகனார் பசும்பொன் தேவர் ஜெயந்தி விழா மற்றும் குருபூஜை விழா அழைப்பிதழை, தேவர் மக்கள் இயக்கம் நிறுவனத் தலைவர் சங்கிலி P. மாரி பாண்டியன் வழங்கினார்

இலண்டன், கர்நாடகா, ஆந்திரா போல

உள்ளூர் மளிகைக் கடைக்கும் ஒரு எட்டு போங்க!

முதல்வரை விமர்சித்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, அக். 16 - "முதல்வர் இலண்டன், கர்நாடகா, ஆந்திரா போகட்டும்; அப்படியே உள்ளூரில் உள்ள மளிகைக் கடைக்கும் ஒரு எட்டுப் போய், விலைவாசி உயர்வைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

முதலமைச்சர் அவர்கள் இலண்டன் போகிறார், கர்நாடகா போகிறார், ஆந்திரா போகிறார். போகட்டும்...

அப்படியே உள்ளூரில் உள்ள மளிகைக் கடைக்கும் ஒரு எட்டு போய், விலைவாசி உயர்வைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தயவுசெய்து, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரிடம் கேட்டுவிட வேண்டாம். அவர் எல்லாம் 'நார்மலாக' இருக்கிறது என்பார்.

மக்கள் பண்டிகைக் காலத்தின் மகிழ்ச்சிக்கு பதிலாக, பயத்தில் உறைந்துபோய் இருக்கிறார்கள். அவர்களிடம் கேளுங்கள்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.


தினத்தந்தி

அரிசி, பருப்பு, சர்க்கரை விலை உயர்வு

பொதுமக்கள் கவலை

அத்தியாவசிய பொருட்களின் சராசரி தினசரி சில்லறை விலை (Retail Price) 14.10.2026 நிலவரம்

அத்தியாவசிய பொருட்கள்	தமிழ் நாடு (விலை ரூ.)	ஆந்திர பிரதேசம் (விலை ரூ.)	மகாராஷ்டிரம் (விலை ரூ.)	குஜராத் (விலை ரூ.)	இந்தியா (விலை ரூ.)
அரிசி	64.32	58.73	50.58	38.08	47.21
கோதுமை மாவு	56.62	43.62	45.26	38.33	37.77
துவரம் பருப்பு	148	121.52	138.11	121.58	129.96
உளுந்து	138.67	119.73	131.47	120.17	124.54
பச்சை பருப்பு/பாசி பருப்பு	120.74	108.54	119.79	106.67	113.66

சான்று: அத்தியாவசியப் பொருட்களின் சராசரி தினசரி சில்லறை விலை, நுகர்வோர் விவகாரத் துறை (விலைக் கண்காணிப்புப் பிரிவு), இந்தியா

பண்டிகைக்கால தொடர் விடுமுறையை முன்னிட்டு

தமிழ்நாட்டில் ரயில் சேவைகளை அதிகரிக்க வேண்டும்!

ஒன்றிய அரசுக்கு - தயாநிதி மாறன் எம்.பி. மீண்டும் வலியுறுத்தல்!

சென்னை, அக். 16 - வரவிருக்கும் பண்டிகைகள் மற்றும் தொடர்ச்சியான விடுமுறைகளை முன்னிட்டு தமிழ்நாட்டில் ரயில் சேவைகள் மற்றும் முன்பதிவு இல்லா பெட்டிகளின் *(unreserved coach)* எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தி தயாநிதி மாறன் எம்.பி. அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, கோவை, நெல்லை உள்ளிட்ட முக்கியமான வழித்தடங்களில் கூடுதல் ரயில் சேவைகள் தொடர்பாக, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி., ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி கடிதம் எழுதியிருந்தார். இந்தக் கோரிக்கையை ஏற்று, இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் அவர்களும் செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி எழுதியிருந்த பதில் கடிதம் வாயிலாக உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில், விடுமுறை மற்றும் பண்டிகை காலங்களில், பயணிகளின் இன்னல்களை போக்கும் வகையில் ரயில் சேவைகளை மேம்படுத்த மீண்டும் வலியுறுத்தி, ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இக்கடிதத்தை எழுதுகிறேன். வரவிருக்கும் விடுமுறைக்காலங்களை முன்னிட்டு தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு இடையே கூடுதல் ரயில் சேவைகளை இயக்க வேண்டியதன் அவசியத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இது தொடர்பாக நான் 17.09.2026 அன்று உங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு நீங்கள் 22.09.2026 அன்று அளித்திருந்த பதிலில், "உங்கள் கோரிக்கையை ஆய்வு செய்து கூடுதல் ரயில்களை இயக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று உறுதியளித்திருந்தீர்கள். அதன் தொடர்ச்சியாக இக்கடிதம் அமைகிறது. அடுத்தடுத்து தொடர்ச்சியாக பண்டிகைக்கால விடுமுறைகள் நெருங்கிவரும் நிலையில், பயணிகளின் தேவை அதிகரிப்பதற்கு முன்பாகவே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பயண நெரிசல் மிகுந்த காலங்களில், முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டுகளைப் பெறுவதில் பயணிகள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். அதே வேளையில், முன்பதிவில்லா பெட்டிகளில் அளவுக்கு அதிகமான கூட்டம் காணப்படுவதால், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பிற பயணிகள் பல மணிநேரம் நின்று கொண்டே, மிகவும் சிரமமான சூழலில் பயணிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றனர்.

போதுமான ரயில் சேவைகள் இல்லாதது சாலைப் போக்குவரத்தின் மீதும் கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது. இதனால் பயணிகள் தனியார் பேருந்து மற்றும் வாகனங்களின் அதிகப்படியான கட்டணச் செலவிற்கும், கடுமையான போக்குவரத்து நெரிசலுக்கும் ஆளாகின்றனர். விடுமுறைக்காலங்களில் ஏற்படும் இத்தகைய பயணிகளின் தேவை அதிகரிப்பை முன்கூட்டியே கணிக்க முடியும் என்பதால், அவசரக்கால நடவடிக்கைகளைத் தாண்டி, முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும். ரயில் சேவைகளை அதிகரிப்பதில் ஏற்படும் எந்தவொரு தாமதமும், வரவிருக்கும் விடுமுறைக்காலங்களில் ஆயிரக்கணக்கான பயணிகள் அதே சிரமங்களை எதிர்கொள்ளும் நிலையை உருவாக்கும்.



எனவே, இப்பிரச்சனை குறித்த ஆய்வை விரைவுபடுத்தி, பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சகத்தைக் கேட்டுக்கொள்கிறேன்:

1. பண்டிகைக் காலங்கள், தொடர் விடுமுறை நாட்கள் மற்றும் வார இறுதி விடுமுறை நாட்களில் தமிழ்நாட்டிற்குச் சேவை அளிக்கும் முக்கிய மற்றும் அதிகத் தேவை உள்ள வழித்தடங்களில் கூடுதல் ரயில்களை இயக்க வேண்டும்.

2. அதிகப் பயன்பாட்டில் உள்ள வழித்தடங்களில் முன்பதிவு இல்லா / பொதுப் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக, குறைந்தது 10 கூடுதல் பெட்டிகளை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய வேண்டும்.

3. பயண நெரிசல் மிகுந்த காலங்களுக்கு முன்பாகவே கூடுதல் ரயில்கள் மற்றும் பெட்டிகளை இயக்க ஏதுவாக, கடந்த காலப் பயண முறைகள் மற்றும் முன்பதிவுத் தரவுகளைப் பயன்படுத்திப் பயணிகளின் தேவையை முன்கூட்டியே மதிப்பிடும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள இந்த ஆய்வு நடவடிக்கைகள், வரவிருக்கும் விடுமுறைக்காலத்திற்கு முன்பாகவே உரிய நேரத்தில் உறுதியான நடவடிக்கைகளாக மாற்றப்படுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அமைச்சகம் முன்வைக்கவுள்ள குறிப்பிட்ட நடவடிக்கைகளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்; இதற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளவும் விரும்புகிறேன்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் ஒரே இரவில் 4 கடைகளின்

பூட்டை உடைத்து ரூ.25 ஆயிரம் திருட்டு!

தருமபுரி, அக். 16 –

தருமபுரி அருகே முகமுடி கொள்ளையர்கள் அட்டகாசம். ஒரே இரவில் 4 கடைகளின் பூட்டை உடைத்து பாத்திர கடையில் ரூ.25 ஆயிரம் திருட்டு. சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பு.

தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டை மற்றும் ஒளவை நகர், சத்யா நகர், ஒட்டப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் தொடர் திருட்டில் ஈடுபட்டு வரும் முகமுடி அணிந்த கொள்ளையர்களால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று ஒரே இரவில் பாத்திரை கடை, உடற்பயிற்சி மையம், பழைய இரும்பு கடை என நான்கு கடைகளின் பூட்டுகளை உடைத்துள்ளனர். இதில் பாத்திரை கடையில் இருந்த சுமார் ரூ.25 ஆயிரம் ரொக்கப் பணத்தை மர்ம நபர் திருடிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிசிடிவி காட்சிகளில் மர்ம நபர் கடைகளின் பூட்டுகளை உடைத்து உள்ளே புகுந்து பணத்தைத் திருடிச் செல்லும் காட்சிகள் பதிவாகியுள்ளது.

மேலும் அதியமான் கோட்டை மற்றும் ஒளவை நகர், சத்யா நகர் ஆகிய பகுதிகளில் தொடர்ந்து நேற்று இரவு முன்தினம் நான்கு பேர் கொண்ட முகமுடி அணிந்த மர்ம கும்பல் சுற்றித்திரிந்து கடைகளை பார்வையிட்டு வரும் சம்பவத்தால் இரவு நேரங்களில் கடைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலும் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் மர்ம நபர்களைக் கண்டறிந்து தொடர் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து தொடர்ந்து தருமபுரி மாவட்டத்தில் முகமுடி கொள்ளைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதால்

காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.